செ.வெ.எண் : 43 நாள் : 17.06.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**கொடிசியா சிறப்பு சிகிச்சை மையம், இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

---

கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா சிறப்பு சிகிச்சை மையம், இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை ஆகிய இடங்களில் இன்று (17.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்ஆய்வின்போது உதவி ஆட்சியர்(பயிற்சி) செல்வி.ஆர்.சரண்யா இ.ஆ.ப., அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தற்போது தொற்றுபரவல் வெகுவாக குறைந்து வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பொள்ளாச்சி அரசு மருத்துவமனை உள்ளிட்ட 15 அரசு மருத்துவமனைகளிலும், கொரோனாசிறப்பு சிகிச்சை மையங்களான கொடிசியா வளாகம், காருண்யா கல்லூரி, மத்தம்பாளையம், பாரதியார் பல்கலைகழகம், உள்ளிட்ட 35 கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்களிலும், மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 108 தனியார் மருத்துவமனைகளிலும் கெரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இன்று கொரோனா சிறப்பு சிகிச்சை மையமான கொடிசியாவில் மொத்த படுக்கைவசதிகள், சிகிச்சையில் உள்ளவர்கள், ஆக்ஸிஜன் படுக்கை வசதிகள் மற்றும் சித்த மருத்துவ சிகிச்சை பிரிவு ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதுடன், அங்கு பணிபுரியும் மருத்துவர்கள், பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு குடிநீர், தங்கும் இடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சாதாரண சிகிச்சை பிரிவு, ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள ஆக்ஸிஜன் உற்பத்தி இயந்திரங்களின் எண்ணிக்கை மற்றும் உற்பத்தி அளவு குறித்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பிரிவு மற்றும் புறநோயாளிகள் பிரிவுகளில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கிருந்த நோயாளிகளின் உறவினர்களிடம் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை உரிய நேரத்தில் வழங்கவும், ஆக்ஸிஜன் தேவைப்படும் கொரோனா நோயாளிகளுக்கு விரைந்து சிகிச்சை அளிக்கவும் மருத்துவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**